I/331354/2023

**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)**
**செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்:திரு.இரா.வில்சன் இராச்சேகர், பி.ஏ.,**

COLREV-COLR/24518/2022-A3 நாள்:19-05-2023

**பொருள்:** கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருப்பத்தூர் மாவட்டம் – கிராம நிருவாக அலுவலராகப் பணியாற்றி பணியிடையே 05.11.2020 அன்று காலஞ்சென்ற லேட்.சி.செல்வகணபதி என்பவரின் மகன் திரு.செ.துக்காராம் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது – அரசாணை வரப்பெற்றது – பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுவது – தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்.23.01.2020.
2. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.அ5/10031/2020 நாள்:10.08.2021.
3. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்( பொது) செயல்முறைகள் ந.க.அ5/10031/2020 நாள்:10.08.2021.
4. அரசாணை (3டி) எண் 50, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, பணி 9(1) நாள்:20.03.2023
5. கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க.ஆ.கு.4/752205/2022 நாள்:24.04.2023.

******

**ஆணை:**

திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில், கிராம நிருவாக அலுவலராகப் பணியாற்றி பணியிடையே 05.11.2020 அன்று காலஞ்சென்ற லேட்.செல்வகணபதி என்பவரின் மகன் திரு.துக்காராம் என்பவருக்கு பார்வை -2 (ம) 3இல் கண்டுள்ள செயல்முறைகள் ஆணைப்படி கருணை அடிப்படையில் இம்மாவட்ட வருவாய் அலகில், இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு 13.08.2021 முப முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

2) மேலும் பார்வை 4-இல் கண்டுள்ள அரசாணை மற்றும் பார்வை 5-இல் கண்டுள்ள கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதப்படி தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் அவர் பணியில் சேர்ந்த நாளான 13.08.2021 முப முதல் பணிவரண்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3) எனவே மேற்கண்ட அரசாணைப்படி திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் **திரு.செ.துக்காராம்** என்பவரின் பணியினை பணியேற்ற நாளான 13.08.2021 **முப** முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரண்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுக் காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண்பருவமாக நிர்ணயம் செய்தும் உத்தரவிடப்படுகிறது.

4) தனியரின் பணியானது வரண்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின் படி அவற்றை பெறத் தனியர் தகுதியுடையவராகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ள தொடர்புடைய அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**Signed by Wilson Rajasekar R**
**Date: 19-05-2023 12:54:59**

WILSON RAJASEKAR R
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது),
திருப்பத்தூர்.

பெறுநர்:
சம்மந்தப்பட்ட பணியாளர்,

நகல்
1.வட்டாட்சியர், திருப்பத்தூர் வட்டம்.
2."அ3" - இருக்கைக்கு.